[25th March 1969

Car parking space in theatres

* 196. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of cars for which parking space should be provided in each cinema theatre in Madras City;

(*b*) the names of the cinema theatres which have provided such parking space;

(*c*) the names of the theatres which have not provided such parking space; and

(*d*) the action taken against these theatre owners?

திரைப்படக் கொட்டகைகளில் கார் நிறுத்த இடம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) சென்னை நகர திரைப்படக் கொட்டகைகளில் எத்தனை மோட்டார் கார்கள் நிறுத்த இடம் இருக்க வேண்டும் ?

(இ) அதன்படி எந்தெந்தக் கொட்டகைகளில் மோட்டார் கார்கள் நிறுத்த இட வசதி உள்ளது ?

(உ) இட வசதி செய்யாத கொட்டகைகள் எவை, எவை ?

(எ) அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

" Red Army "

* 197. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the Left Communists are forming secretly an Army on the lines of the " Red Army " in Tamil Nadu; and

(b) if so, the action taken thereon?

செங்காவலர் படை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத்தில் இடது சாரி கம்யூனிஸ்டுகள் ரகசியமாக " செங் காவலர் படை " போன்று ஒரு படை தயாரிப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) சமூகப் பணி செய்தல், உழவர்களின் நலன் காத்தல், முதலான பொதுநல நோக்கங்களுக்காக, இந்தியப் பொதுவுடமை கட்சி (இடது சாரி) இம்மாநிலம் எங்கணும் "தொண்டர் படை" திரட்டக்கருதியுள்ள தாக அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ள தகவலிலிருந்து தெரியவருகிறது.

(இ) இது குறித்து இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை எதுவும் இதுவரை ஏற்படவில்லை.

---

a Printed as Appendix II on pages 28–29.

25th March 1969]

திரு ஜி. சுவாமிநாதன் : தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் செங்காவலர் படை என்று திரட்டி வருவதையும் அது நிலச்சுவான்தார்களை மிரட்டியும், அச்சுறுத்தியும் வருவதும் இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தொண்டர் படை என்ற பெயரில் அவர்களுடைய கூட்டங்கள், ஊர்வலங்கள், இவைகளுக்குப் பயன்படுத்துவதற்காக ஒரு அணி திரட்டப்படுவதாக தகவல் வந்திருக்கிறது. ஆனால், அந்தப் படையினால் நிலச்சுவான்தார்கள் அச்சுறுத்தப்படுவதாக தகவல் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை.

Sale of books about Mao-Tse-Tung

* 198 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the **Hon. the** Chief Minister be pleased to state :—

(*a*) whether the Government are aware of the fact that the Left Communists are openly praising Mao-Tse-Tung, selling his photos and books and inciting the public to indulge in agitations; **and**

(*b*) the action taken in this regard?

மாசேதுங்கைப் பற்றிய புத்தகங்கள் விற்பனை.

***திரு என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) இடது சாரி கம்யூனிஸ்டுகள் பகிரங்கமாக மாசேதுங்கைப் புகழ்வதும், அவரின் படங்களையும், புத்தகங்களையும் விற்பதும் பொதுமக்களை அணுகி கிளர்ச்சிக்குத் தூண்டுவதும் அரசு அறியுமா ?

(இ) அது பற்றி எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம். கோயம்புத்தூரைச் சேர்ந்த, தற்போது இடதுசாரி பொதுவுடமைக் கட்சியை விட்டு விலகிவிட்ட எல். அப்பு என்பவரும் அவர் குழுவும் இம்மாநிலத்தில் மாசேதுங்கின் சிந்தனைகளையும், இலட்சியங்களையும் பரப்புவதில் ஈடுபட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ) இடதுசாரி பொதுவுடமைக் கட்சியிலிருந்து விலகிவிட்ட தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் தமிழ்நாட்டுக் காவல்துறைத் தலைவரால் கண்காணிக்கப்பட்டு, அவ்வப்போதே அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டு வருகின்றன.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த மாசேதுங் படத்தை விற்பதும் அவருடைய பொன்மொழிகளை நாட்டு மக்களிடையே பரப்புவதும் சட்டப்படி குற்றமாகுமா ? அப்படிக் குற்றமென்றால், அதைத் தடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அந்தப் பொன்மொழிகள் நாட்டினுடைய பாதுகாப்பை, நாட்டின் ஒற்றுமையைக் குலைப்பதாகவோ, குந்தகம் விளைவிப்பதாகவோ, இருந்தாலும், எதிரிகளால் அபாயம் ஏற்படுகிற அளவுக்கு இருந்தாலும் அப்படிப்பட்ட பொன் மொழிகள் வினியோகிக்கப்பட்டால் அவைகள் எல்லாம் அரசாங்கத்தால் தடுக்கப்படும்.

National Seeds Corporation

* 199 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) the kinds of seeds so far supplied to Tamil Nadu by the National Seeds Corporation which supplies standard seeds; and